# வாசிப்புப் பெட்டகம்

ஓர் ஊரில் ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். அவளுக்குச் சொந்தம் யாரும் இல்லாததால், அவள் மிகவும் வருத்தத்துடன் வாழ்ந்து வந்தாள். ஒருநாள், அவள் ஒரு தேவதையைப் பற்றிக் கேள்விப்பட்டாள். அந்தத் தேவதையைச் பார்க்கக் காட்டுக்குச் சென்றாள்.

அவள் தேவதையைச் சந்தித்தாள். தேவதையைச் சுற்றி பல வண்ணத்துப்பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்தப் பிறகு அந்தப் பெண்ணுக்குக் கவலையெல்லாம் பஞ்சாகப் பறந்துவிட்டது. அவள் மறுபடியும் மகிழ்ச்சியாக இருந்தாள். அழகான விஷயங்களைப் பார்த்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று அவள் உணர்ந்தாள்.